தினமலர்
சனி ■ ஜூன் 29, 2019

## பாளை., சாரதா கல்லூரியில் இலக்கிய மன்ற நிகழ்வு

திருநெல்வேலி, ஜூன் 29—

பாளை., சாரதா கல்லூரியில் பொதிகை இலக்கிய மன்ற விழா நடந்தது.

கல்லூரி முதல்வர் மலர்விழி தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மைசூரு இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் பேராசிரியர் பாலகுமார் மொழிப் பயன்பாடு மற்றும் மொழியின் முக்கியத்துவம் குறித்து சிறப்புரையாற்றினார்.

தமிழ்த்துறைத் தலைவர் பார்வத கிருஷ்ணம்மாள் மற்றும் உதவிப் பேராசிரியர்கள் உஷா, தனலெட்சுமி கலந்து கொண்டனர்.

இயற்பியல் துறை மாணவி மகா விஜயலட்சுமி வரவேற்றார். கணிதவியல் துறை மாணவி ராஜ சந்தியா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

கணிதவியல் துறை மாணவி ஜெயஸ்ரீ நன்றி கூறினார்.




பாளை. சாரதா கல்லூரியில் பொதிகை இலக்கிய மன்ற விழா நடந்தது.